"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

# தமிழ்மொழி ஆண்டு 10

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. சுவாமி விபுலானந்தர் எழுதிய நாடகத்தமிழ் நூல்
   1. யாழ்நூல்
   2. மதங்கசூளாமணி
   3. விநாயகர்பள்ளு

2. மலையும் மலை சார்ந்த இடமும்
   1. முல்லை
   2. பாலை
   3. குறிஞ்சி

3. தாத்தா வெற்றிலை நட்டார். இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. தொழிலாகுபெயர்
   2. பொருளாகுபெயர்
   3. சினையாகுபெயர்

4. ஈழத்தில் 1980களின் பின்னர் இடப்பெயர்வு ஏற்படக் காரணம்
   1. உள்நாட்டுப்போர்
   2. உலகப்போர்
   3. வெளிநாட்டுப்போர்

5. நெல், புல் என்பவற்றின் இலை தாள் போல தென்னை, பனை என்பவற்றின் இலை
   1. தாள்
   2. ஓலை
   3. மடல்

6. ‘மஞ்சளாவிய மாடங்கள் தோறும் ...’ மஞ்சு என்பதன் பொருள்
   1. முகில்
   2. மழை
   3. மலை

7. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன
   1. ஐம்புலன்
   2. ஐம்பொறி
   3. ஐம்பூதம்

8. கற்றோரால் மட்டும் பொருள் உணர்ந்து கொள்ளக்கூடிய இலக்கியவகைச் சொல்
   1. திரிசொல்
   2. இடைச்சொல்
   3. இயற்சொல்

9. உடனிலை மெய்ம்மயக்கம் கொண்டுள்ள சொல்
   1. நண்பன்
   2. வண்ணம்
   3. தங்கம்

10. மாதவி தனது அரங்கேற்றத்தில் பதினொரு வகையான கூத்துகள் ஆடினாள் எனக் குறிப்பிடப்படும் காப்பியம்
    1. மணிமேகலை
    2. குண்டலகேசி
    3. சிலப்பதிகாரம்

1 2 3

11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
    1. பரிபாடல்
    2. நெடுநல்வாடை
    3. முல்லைப்பாட்டு

12. இருபத்தைந்தாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படுவது
    1. பொன்விழா
    2. வைரவிழா
    3. வெள்ளிவிழா

13. ஒற்றுமை உயர்வைத் தரும். ஒற்றுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. உறவு
    2. நட்பு
    3. வேற்றுமை

14. வேடனுக்கு வேட்டுவிச்சி போல உழவனுக்கு
    1. உழவி
    2. உழச்சி
    3. உழத்தி

15. தமிழிலுள்ள முதல் எழுத்துகளின் எண்ணிக்கை
    1. முப்பது
    2. இருநூற்றுப்பதினாறு
    3. இருநூற்றுப்பதினேழு

16. வதனமதிக் குடைக்கீழ் ஆளுமே பெண்மை அரசு. இதில் வதனமதி
    1. உவமை அணி
    2. உருவக அணி
    3. மோனை அணி

17. வையகம் போற்ற வாழ்ந்திடுவோம். வையகம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. பூமி
    2. வானகம்
    3. கானகம்

18. மங்கலம் அல்லாத சொல்லை ஒழித்து மங்கலமான சொல்லால் கூறுவது
    1. இடக்கரடக்கல்
    2. குழூஉக்குறி
    3. மங்கலம்

19. “நந்தவனத்திலோர் ஆண்டி குயவனை வேண்டி கொண்டுவந்தான் ஒரு தோண்டி…” இதில் தோண்டி என்பதன் பொருள்
    1. வெள்ளிக்குடம்
    2. மட்பானை
    3. செப்புக்கலம்

20. ஓட்டப்பந்தயத்தில் குதிரைகள் ஓடியது. இதில் வந்துள்ள வழு
    1. திணை
    2. பால்
    3. இடம்

1 2 3

21. இருதிணைப் பொதுப்பெயராக அமைவது
    1. தாய்
    2. ஏழை
    3. புலவர்

22. ‘கடிமலர் வண்டுகள் நெடிது பாட …’ இதில் வந்துள்ள உரிச்சொல்
    1. பாட
    2. நெடிது
    3. கடி

23. ஒரு நாளினையும் சிவந்த வாயினையும் குறிக்கும் சொல்
    1. வெள்ளி
    2. செவ்வாய்
    3. திங்கள்

24. பகுபத உறுப்புக்கள் ஆறும் அடங்கிய சொல்
    1. நடந்தனன்
    2. உண்டாள்
    3. படித்தான்

25. மாரியைப் பாரியுடன் ஒப்பிட்டுப் பாடிய புலவர்
    1. கம்பர்
    2. கபிலர்
    3. பரணர்

(25×1=25 புள்ளி)

**2. சேர்த்தெழுதுக.**

1. ஆசாரம் + கோவை = ______________________
2. கல் + பதுக்கை = ______________________
3. பொருள் + ஆதாரம் = ______________________
4. கருமை + குயில் = ______________________
5. முள் + செடி = ______________________
6. நான்கு + நிலம் = ______________________

(6×1=6 புள்ளி)

**3. பிரித்தெழுதுக.**

1. வெண்முகில் = ____________ + ____________
2. பூவிதழ் = ____________ + ____________
3. அறுசுவை = ____________ + ____________
4. மணற்கேணி = ____________ + ____________
5. தென்திசை = ____________ + ____________
6. பொற்றகடு = ____________ + ____________

(6×1=6 புள்ளி)

**4. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவுசெய்க.**

1. மோப்பக் குழையும் ________________________

________________________________ 1 புள்ளி

2. இல்வாழ்வான் என்பான் ________________________

________________________________ 1 புள்ளி

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இடப்பெயர்வினால் மனிதவாழ்வில் ஏற்படும் துயரங்கள் யாவை? 1 புள்ளி

________________________________

________________________________

2. மொழிபெயர்ப்பாளருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் எவை? 1 புள்ளி

________________________________

________________________________

________________________________

3. அடுக்குமொழி, இணைமொழி இரண்டினையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

1 புள்ளி

4. கருத்தின் அடிப்படையில் வாக்கியங்களை வகைப்படுத்தி எழுதுக. 2 புள்ளி

5. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன? 1 புள்ளி

6. 'ஆழி சூழ் உலகமெலாம் பரதனே ஆழ, நீ போய் தாழ் இருஞ்சடைகள் தாங்கி...'
இத்தொடர் யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

1 புள்ளி

7. வேற்றுமை என்றால் என்ன? 4ஆம் வேற்றுமையின் உருபினையும், சொல்லுருபுகளையும் எடுத்துக்காட்டுடன் தருக. 2 புள்ளி

8. பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் நினைவுச்சின்ன வகைகளைக் குறிப்பிடுக.

1 புள்ளி

**6. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நற்றாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

1. அன்னப்பறவை எதை நாடிச்செல்லும்? 1 புள்ளி

_______________________________________________

2. அறிஞர் யாரைத் தேடிச் செல்வர்? 1 புள்ளி

_______________________________________________

3. முதுகாட்டில் காணப்படுவது எது? 1 புள்ளி

_______________________________________________

4. இப்பாடலிலிருந்து, பின்வருவனவற்றைத் தருக.
   1. எதுகை _______________________ ¼ புள்ளி
   2. மோனை _______________________ ¼ புள்ளி
   3. உவமைத்தொடர் _______________________ ½ புள்ளி

5. இப்பாடலின் பொருளினை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2 புள்ளி

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. சிந்தனைசெய்
2. பெற்றோரைப் போற்றுவோம்

3 புள்ளி

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. ஐரோப்பியர் வருகையின்பின் ஈழத்தமிழர் வரலாறு
2. தாய்மொழிக் கல்வியின் அவசியம் 8 புள்ளி
3. ‘நவீன தொடர்பாடல் சாதனங்களும் இளம் தலைமுறையினரும்’ நன்மைதீமைகளை ஆராய்க.

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தொன்றுதொட்டு செய்ந்நன்றியறிந்து ஒழுகுதலைச் சிறந்த அறமெனக் கடைப்பிடிக்கும் நாடுகளில் தமிழ்நாடு தலைசிறந்து விளங்கியது. “நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல அன்றே மறப்பது நன்று” என்றும் “தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக் கொள்ளுவர் பயன்தெரிவார் என்றும் அறநூலாகிய திருக்குறள் நன்றியின் பெருமையை நயம்படக் கூறுகின்றது. உப்பிட்டவரை உள்ளளவும் நினை, உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்தல் ஆகாது என்றும் வழங்கிவரும் பழமொழிகள், இந்நல்லறம் நெடுங்காலமாகப் போற்றப்பட்டுவருவதற்குச் சான்றாகும். செய்ந்நன்றி மறவாமை எனும் தொல்லறம் அங்கநாட்டு அரசனான கர்ணனிடமும், இலங்கை நாட்டு வீரனான கும்பகர்ணனிடமும் தலைசிறந்து விளங்கிற்று. கர்ணன் தாயார் குந்திதேவியின் வேண்டுகோளை ஏற்கமறுத்து ‘செஞ்சோற்றுக் கடன் கழியாது என் தம்பியருடன் சேரேன்’ என்ற உறுதியுடன் நீதியற்ற வழியில் சென்ற நண்பன் துரியோதனுக்காக அமர்க்களம் சென்று ஆவிதுறந்தான். இவ்வாறே இலங்கை வேந்தன் இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணனும் அறநெறியை ஆதரிக்கும் நேர்மை வாய்ந்தவன். அயோத்தி மன்னன் இராமனின் மனைவி சீதையை சிறைவைத்தது தகாத செயல் என்பதை இலங்கை வேந்தனுக்கு எடுத்துரைத்தான் தம்பி கும்பகர்ணன். ஆனாலும் இராவணன் அதனை ஏற்காது போக, யுத்தம் என்று வந்தபோது அண்ணனுக்குத் துணையாய் நின்று அமர்புரிந்து ஆவி துறப்பதே மேல் என எண்ணிப் போர்க்களம் புகுந்து உயிர் துறந்தான். ஆகவே கர்ணனும் கும்பகர்ணனும் செய்ந்நன்றியறிதலாகிய அறத்தை உயிரினும் மேலாக ஆதரித்த வீரர் என்பது இனிதுணரப்படுகின்றது.

1. செய்ந்நன்றியறிதலில் சிறந்த நாடாக விளங்கும் நாடு எது? 1 புள்ளி

______________________________

2. இலங்கைவேந்தன் யார்? 1 புள்ளி

______________________________

3. நன்றியினை உயிரினும் மேலாக மதித்தவர்கள் யாவர்? 1 புள்ளி

______________________________

4. கர்ணன் யாருக்காகப் போர்க்களம் சென்றான்? 1 புள்ளி

______________________________

5. கும்பகர்ணன் எத்தன்மை வாய்ந்தவன்? 1 புள்ளி

______________________________

6. நன்றிபற்றி கூறும் பழமொழிகள் இரண்டு தருக. 2 புள்ளி

______________________________

______________________________

7. செய்ந்நன்றியறிதல் பற்றிக் குறிப்பிடும் திருக்குறள் ஒன்று எழுதுக. 2 புள்ளி

______________________________

______________________________

2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.

4 புள்ளி

**Deutsch: Universitäre Hochschulen und Hochschulinstitutionen**

Neben den beiden Eidgenössischen Technischen Hochschulen gehören zehn kantonale Universitäten zu den universitären Hochschulen. Die älteste wurde bereits 1460 in Basel gegründet. Heute kann die Schweiz auf ein universitäres System zählen, das international beachtete Leistungen in Forschung und Lehre erbringt und entscheidend zur wirtschaftlichen, kulturellen und sozialen Entwicklung des Landes beiträgt.

Das Studium folgt dem internationalen dreistufigen Studienmodell mit Bachelor-, Master- und Doktoratsstufe. Allen Universitäten ist gemeinsam, dass sie neben der Lehre auch in der Forschung und Weiterbildung aktiv sind und Dienstleistungen für Dritte erbringen. Die meisten kantonalen Universitäten sind so genannte Volluniversitäten und bieten einen breiten Fächerkanon an. Einige wenige haben ein spezifischeres Profil und konzentrieren sich auf ausgewählte Bereiche. Das Graduate Institute of International and Development Studies in Genf sowie die Stiftung Universitäre Fernstudien Schweiz in Brig sind als Hochschulinstitutionen anerkannt.

**Français : Hautes écoles universitaires et institutions des hautes écoles**

Outre les deux EPF, dix universités cantonales font partie des hautes écoles universitaires suisses. La plus ancienne université a été fondée à Bâle en 1460 déjà. Actuellement, la Suisse peut s’appuyer sur un système universitaire qui fournit des prestations en recherche et enseignement reconnues sur le plan international et contribue de manière significative au développement économique, culturel et social de notre pays.

L’étude se fonde sur le système de Bologne en trois cycles (bachelor, master et doctorat). Toutes les universités ont un point commun : outre l’enseignement et la recherche, elles sont actives dans la formation continue et fournissent des prestations à des tiers. La plupart des universités cantonales sont des universités généralistes et offrent un spectre de disciplines très étendu. Un petit nombre d’entre elles ont adopté un profil plus spécifique et concentrent leurs efforts sur un nombre restreint de domaines. Le Graduate Institute of International and Development Studies de Genève, de même que la fondation UniDistance Suisse à Brigue sont reconnus comme étant des institutions des hautes écoles.

**Italiano: Università e altri istituti di istruzione superiore**

Oltre ai due politecnici federali esistono in Svizzera dieci università cantonali. La più antica è quella di Basilea, fondata nel lontano 1460. Oggi, la Svizzera può contare su un sistema universitario che fornisce prestazioni di ricerca e insegnamento riconosciute a livello internazionale e essa contribuisce in maniera decisiva allo sviluppo economico, culturale e sociale del Paese.

I cicli di studio si basano sul modello internazionale a tre livelli (bachelor, master e dottorato). Le università, che sono attive non soltanto nell’insegnamento, ma anche nei campi della ricerca e della formazione continua, forniscono anche prestazioni a favore di terzi. La maggior parte di esse sono cosiddette università plenarie ed offrono una vasta scelta di materie di studio. Altre hanno un profilo più specifico e si concentrano su settori prescelti. L’Istituto di alti studi internazionali e sullo sviluppo di Ginevra (IHEID) e la Stiftung Universitäre Fernstudien Schweiz di Briga sono anche riconosciuti come istituti universitari.

**3. கீழ்க்காணும் பந்தியைப் படித்து அதனை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

நமக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே. அவர்களை விடச் சிறந்தவர் நமக்கு யாரும் இல்லை. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும் 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை' என்றும் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்றும் முன்னோர் கூறிய முதுமொழிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். பெற்றோர்கள் நமக்குச் செய்யும் உதவியும், அவர்கள் காட்டும் அன்பும் நம்மால் இவ்வளவென்று அளவிட்டுக் கூறமுடியாதன. நம்மைப் பெற்றெடுக்கவேண்டுமென்று நம் பெற்றோர் பல விரதங்களை மேற்கொண்டார்கள்; பல யாத்திரைகள் செய்தார்கள்; அல்லும்பகலும் இறைவனை நினைந்து தவங்கிடந்தார்கள். தாம் பெற்ற பிள்ளைகளை அருமையாகவும் பெருமையாகவும் போற்றி வளர்த்தார்கள். நம்மீது ஈ, கொசு, எறும்பு மொய்க்காமல் காத்தார்கள். வேளையறிந்தும் விருப்பம் தெரிந்தும் நமக்கு வேண்டிய உணவுகளைத் தந்தார்கள். நமக்கு நோய் ஏற்பட்டால் அவர்கள் அடைந்த அல்லலும் கவலையும் அளவிடத்தக்கன அல்ல. நாம் பள்ளிப்பருவமடைந்ததும் நம்மைப் பள்ளிக்கு அனுப்பினார்கள். நாம் கற்று வல்லவர்களாவோம் என்றும் உயர்ந்த பதவிகளை அடைவோம் என்றும் நம் நல்வாழ்வையே எண்ணி இன்பங்கொண்டார்கள். தம்முடைய பசியையும் தேவைகளையும் பொருட்படுத்தாது எம்மைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்தனர். அவர்களின் அன்பும் தியாக சிந்தையும் எத்துணை! எத்துணை!

4 புள்ளி

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
| --- | --- | --- | --- |
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |